**செய்தி வெளியீடு எண்: 166** **நாள்: 22.02.2011**

# கலை பண்பாட்டுத் துறை

## தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம் தொடக்க விழா

22.02.2011 அன்று மயிலாப்பூர், லஸ் அவென்யூ (நாகேஸ்வரராவ் பூங்கா அருகில்) முன்னாள் மாநகராட்சிப் பள்ளிக் கட்டிடத்தில் தமிழ்நாடு_சவகர் சிறுவர் மன்ற கலை பயிற்சிகளை வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் அவர்கள் தொடங்கி வைத்தார். சென்னை மாநகராட்சி பள்ளி கட்டிடமும் அதன் வளாகமும் விலை மதிக்க முடியாத பகுதியாக இருந்த நிலையிலும் குழந்தைகளின் கலை ஆர்வத்தினை வளர்க்கும் நிறுவனம் என்பதால் தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றத்திற்காக கலை பண்பாட்டுத்துறைக்கு வழங்கியதை பெரும் மகிழ்ச்சியுடன் நினைவு கூர்ந்தார். மேலும், சென்னை விக்டோரியா ஹாலில் அமையவுள்ள ஒலி ஒளி நிகழ்ச்சியில் சென்னை சவகர் சிறுவர் மன்ற குழந்தைகளின் நிகழ்ச்சிகள் முதலாவதாக அமைய வேண்டும் என்றும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தெரிவித்தார்கள். 2010 ஆம் ஆண்டு சென்னை மாவட்டக் கலைப் போட்டிகளில் வெற்றி பெற்ற நகரின் பல்வேறு பள்ளிகளை சேர்ந்த 40 மாணவ மாணவியருக்கு பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கினார். 19.02.2011 மற்றும் 20.02.2011 ஆகிய இரு நாட்களில் சென்னையில் நடைபெற்ற அகில உலக கராத்தே மற்றும் சிலம்பாட்ட போட்டியில் கலந்து கொண்டு பரிசுகளும் பதக்கங்களும் பெற்ற சென்னை சவகர் சிறுவர் மன்ற மாணவர்களை பாராட்டி ஊக்குவித்தார்.

இவ்விழாவிற்கு கலை பண்பாட்டுத்துறை ஆணையர் திரு. ப.அ. மணி, இ.வ.ப., அவர்கள் தலைமையேற்றார். தனது தலைமையுரையில் தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றத்தின் வளர்ச்சியை பற்றியும் இம்மையத்தில் பயிற்சி அளிக்கும், கலைகள் குறித்தும் பயிற்சி பெறுவதால் மாணவர்கள் பெறும் பலன்கள் குறித்தும் ஆணையர் அவர்கள் தெரிவித்தார்கள். மேலும், மாணவர் தங்கள் வாழ்க்கையில் வெற்றி அடைய ஏதேனும் ஒரு கலையையாவது தேர்ந்து எடுத்து அதில் பயிற்சி பெற வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இவ்விழாவில் சென்னை மாநகராட்சி 10வது மண்டலக் குழுத் தலைவர் திரு. மு. ஜெயராமன் அவர்களும், 143வது வட்ட மாமன்ற உறுப்பினர் திரு. சி. குப்பன் அவர்களும், கலை பண்பாட்டுத்துறை துணை இயக்குநர் திரு. வ. ஜெயபால் அவர்களும் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். முன்னதாக தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்ற செயல் அலுவலர் திரு. சு. தங்கநாயகம் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். விழாவில் சவகர் சிறுவர் மன்ற சிறார்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலை நிகழ்ச்சிகளை கண்டு களித்தது சிறப்புக்குரிய ஒன்றாகும். சவகர் சிறுவர் மன்றத்தில் சிறார்கள் சேர்ந்து கலைப் பயிற்சியினை மேற்கொள்ள இந்த வாய்ப்பினை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு கலை பண்பாட்டுத்துறை ஆணையர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**